MALAI MALAR

PAGE NO: 03 DATE: 19.07.2023

ஒருங்கிணைந்த பட்டமேற்படிப்பு

# மாணவர்கள் விண்ணப்பிக்க புதுவை பல்கலை அழைப்பு

புதுச்சேரி, ஜூலை.19—

புதுவை மத்திய பல்கலைக்கழகங்களில் சேரபொதுநுழைவுத்தேர்வு கடந்த மே 21—ந் தேதி நடந்தது. தேர்வை நடத்திய தேசிய தேர்வு முகமை அதன் முடிவுகளை சமீபத்தில் வெளியிட்டது.

பொது நுழைவுத்தேர்வில் பங்கேற்ற மாணவர்கள் புதுவை பல்கலைக்கழகத்தில் இந்த கல்வி ஆண்டுக்கு 5 ஆண்டு ஒருங்கிணைந்த மேற்படிப்புகளில் சேர ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். கல்வி தகுதிகள், விண்ணப்பித்தல் குறித்த குறிப்பேடுகள் பல்கலைக்கழக இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

DINAKARAN

PAGE NO: 16 DATE: 19.7.2023

### புதுவை பல்கலைக்கழகத்தில்

# ஒருங்கிணைந்த முதுநிலை படிப்புக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

புதுச்சேரி, ஜூலை 19: புதுச்சேரி பல்கலைக்கழக உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு பிரிவு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

கடந்த மே 21ம் தேதி முதல் ஜூன் 23ம் தேதி வரை நடத்தப்பட்ட பல்கலைக்கழக பொது நுழைவு தேர்வு (கியூட் - யூஜி) முடிவுகளை தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது. புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் தகுதி அளவுகோல்களின் படி கியூட் தேர்வு (யூஜி)-2023 தேர்வு எழுதி மாணவர்கள் 2023-24ம் கல்வியாண்டில் வழங்கப்படும் பல்வேறு ஐந்தாண்டு ஒருங்கிணைந்த முதுகலை படிப்புகளுக்கான சேர்க்கைக்கு *https://www.pondiuni.edu.in/admissions-2023-24/*. என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளவர்கள் தங்கள் படிப்புகளுக்கு தேவையான கியூட் (யூஜி) தேர்வு தகுதிகள் மற்றும் பாடங்கள் குறித்த் விவரங்களுக்கு பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ள தகவல் சிற்றேட்டையும் பார்க்கவும். சமீபத்திய தகவல்களுக்கு விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக இணையதளத்தை தவறாமல் பார்க்க அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

DINAMALAR

PAGE NO: 03 DATE: 19.7.2023

# ஒருங்கிணைந்த பட்ட மேற்படிப்பிற்கு பல்கலையில் விண்ணப்பிக்கலாம்

**புதுச்சேரி, ஜூலை 19–**

புதுச்சேரி பல்கலையில் ஒருங்கிணைந்த 5 ஆண்டு பட்ட மேற்படிப்பில் சேர விண்ணப்பிக்கலாம்.

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகங்களில் சேர்வதற்கான பொது நுழைவுத் தேர்வு கடந்த மே 21ம் தேதி நடந்தது. தேர்வை நடத்திய தேசிய தேர்வு முகமை, அதன முடிவுகளை சமீபத்தில் வெளியிட்டது.

பொது நுழைவு தேர்வில் பங்கேற்றவர்கள் புதுச்சேரி பல்கலையில் இந்த கல்வி ஆண்டிற்கு 5 ஆண்டு ஒருங்கிணைந்த பட்ட மேற்படிப்புகளில் சேர விண்ணப்பிக்கலாம்.

விருப்பம் உள்ளவர்கள் https://www.pondiuni.edu.in/admissions 2023–24/ என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

கல்வி தகுதிகள் மற்றும் விண்ணப்பித்தல் குறித்த குறிப்பேடுகள் இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.